என்ற ஒரு விதி இருக்கிறதே? அதையும் மீறி ஏன் நியூ என்ட்ரன்ட்ஸ்க்கு, இதிலே அனுபவம் இல்லாதவர்களுக்கு தந்ததற்குக் காரணம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: லாகிரிச் சட்டத்தின்கீழ் விற்கும் உரிமையை அவர்கள் ஏற்கனவே வைத்திருந்தார்கள். அந்தச் சட்டம் நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே எடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே, அந்த விதி இங்கே மேற்கொள்ளப்படவில்லை. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 லைசென்ஸ் தொகை கட்டவேண்டும். போதுமான மூலதனத்தை உடையவராகவும் சட்டத்தின் விதித் துறைகளையும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளையும் பின்பற்றுபவராகவும், எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு நல்ல நிலையில் உள்ளவராகவும், இருக்கவேண்டும். இதெல்லாம் பழைய உத்திரவின்படி போடப்பட்ட விதிகள். மேலும், தமக்கு ஆதாயம் தேடிக் கொள்ளும் வகையில் தான் வாங்குகின்ற மதுவின் அளவை வேண்டுமென்றே அதிகரிக்கமாட்டாதவராக, மதுவிலக்குத் திட்டம் சரிவரச் செயல்படுவதற்கு அரசுடன் ஒத்துழைப்பவராக இருக்க வேண்டும் என்கின்ற விதிகளின் அடிப்படையிலே தான் இவைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவே ஆண், பெண் என்ற வித்தியாசமே இல்லை, விதிகளின்படி, முறைப்படி தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. விதிகளில் பெண்ணுக்குக் கொடுக்கக்கூடாது என்று இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இருதய நோய் ஏற்பட்டிருப்பவர்களுக்கு மது பெர்மிட் கொடுப்பதினால் அவர்களின் நோய் போகமுடியும் என்று அரசாங்கம் நம்புகிறதே, அதே மாதிரி டி.பி. நோய் வந்தவர்களுக்கும், வயிற்று வலி நோய் வந்தவர்களுக்கும் கள்ளு குடிப்பதற்கு பெர்மிட் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது இருதயத்தை அடிப்படையாக வைத்து வழங்கப்படுகிறது. அதற்குப் பிறகு எல்லா நோய்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்றால், கிட்டத்தட்ட மது விலக்கையே ரத்து செய்து விட்டோம் என்று ஆகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

வெள்ளாளப்பட்டி கிராமத்தில் மாணவர்கள் கையில் ஆசிரியர் கற்பூரத்தை கொளுத்தி தீக்காயங்கள் ஏற்படுத்தியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பராஜா, திரு. சித்தன் ஆகியோர்கள் வெள்ளாளப்பட்டி கிராமத்தில் காணமல் போன புத்தகத்தை எடுத்த மாணவரைக் கண்டறிய பள்ளி மாணவர்கள் எல்லோருடைய கைகளிலும் கற்பூரத்தைக் கொளுத்தி தீக்காயங்கள் ஏற்படுத்திய பள்ளி ஆசிரியரின் கொடுமையைப் பற்றி விவாதிக்கவேண்டும் என்று ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு இடம் தருவது முறையல்ல. மேலும் உறுப்பினர்களுக்கு நம்பிக்கையில்லாத்

தீர்மானத்தின் மீதான விவாதத்தில் இதைப்பற்றி பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலும், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, இராஜபாளையம் வட்டாரங்களில் பருவ மழையின்மையும் வரி தள்ளுபடி முதலியவையும்

திரு. எ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், சிவகாசி, இராஜபாளையம் வட்டாரங்களில் பருவமழை தவறியதால் வரண்டு விளைச்சல் ஏதுமின்றி பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதி விவசாய மக்களுக்கு நில வரிகளைத் தள்ளுபடி செய்யவும், கடன் வசூலிப்பதை ஒத்திப் போடவும், பழைய கடன்களை வஜா செய்யவும் வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker Sir. as early as March 1970, reports were received from several Collectors including the Collector of Ramanathapuram that owing to failure of rains in 1969 and in the first quarter of 1970, acute distress prevailed in several pockets in their respective districts. To alleviate the distress caused the Collectors recommended that the collection of Government dues might be postponed. The Government examined the question very carefully and issued orders in March 1970 authorising the Collectors to use their discretion in postponing the collection of all Government loans and land revenue dues for a period of six months in places where they are personally satisfied that owing to failure of rains, acute drought conditions prevail. This concession is available till about the end of September 1970. Under this concession, the complete waiver of long-standing loan arrears is not contemplated. However, in cases of extreme hardship where the arrears are considered irrecoverable, it is open to the Collectors to recommend to the Government for write-off of such arrears.

Grant of remission of land revenue in affected parts would certainly be considered by the Revenue officials in accordance with the Board's Standing orders. As regards special remission, the Government issued orders in April 1970 itself that remission of full wet assessment may be granted for wet lands in the areas specified by the Collector of Ramanathapuram, where the yield has been 25 paise or less except for mamool waste.

திரு. எ. அ. சுப்பராஜா: அமைச்சர் அவர்களுடைய பதிலிலே கலெக்டருடைய டிஸ்கிரெஷன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் குறிப்பாக கேட்க விரும்புகிறேன். கலெக்டர் டிஸ்கிரெஷன் என்றாலும்கூட, லிஸ்டு தயார் செய்து, சிபார்சு செய்து, மறுபடியும் அரசாங்கத்திற்கு வரவேண்டுமா, அல்லது அவரே செய்துவிடலாமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அவர்களே செய்துவிடலாம். அவர்களுக்கு டிஸ்கிரஷனரி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

He himself must be personally satisfied about it and he can take necessary steps in the matter.